DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 17 of 2020** |
| **Deposition of witness for** | **:** | **PW- 6** |
| **Name** | **:** | பொன்னுசாமி |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Village** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>25.6.2025</u>**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் J.கொலக்கம்பையில் குடியிருக்கிறேன், நான் கூலி வேலை செய்கிறேன். இறந்துபோன பழனிசாமியை தெரியும். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி மகாதேவன், 2ஆம் எதிரி நதீன் குமார், 3ஆம் எதிரி ரமேஷ் ஆகியோரை தெரியும். 2ஆம் எதிரி பெயர் சரியாக தெரியவில்லை, நதீன்குமார் என்று நினைக்கிறேன். பழனிசாமி இறந்துபோனது தெரியும், ஆனால் பழனிசாமி எப்படி இறந்துபோனார் என்பது எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் 18.9.2019ஆம் தேதியிட்ட பார்வை மகசரில் இருக்கும் முதல் கையொப்பம் என்னுடையதுதான்,

என்னுடைய இந்த கையொப்பம்தான் Exhibit P5, அதில் இருக்கும் 2வது கையொப்பம் யாருடையது என்று எனக்கு படிக்க தெரியாது. என்னை சாவுக்கு வந்தபோது போலிசார் காவல் நிலையத்திற்கு கூப்பிட்டபோது நான் காவல் நிலையத்திற்கு போனேன், அப்போது என்னிடமும், ஊர்காரர்களிடமும் போலிசார் கையொப்பம் கேட்டதால்தான் நான் அந்த கையொப்பத்தை போட்டேன். காவல் நிலையத்தில் வைத்து போலிசார் என்னை கேட்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத நீதிமன்றத்தில் அனுமதி கோரி அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**:

18.9.2019ஆம் தேதி போலிசார் என் ஊருக்கு வந்தார்கள் என்றும், அப்போது நான் எதிரிகள் பழனிசாமியை அடித்த சம்பவ இடத்தை நான் போலிசாருக்கு அடையாளம் காட்டினேன் என்றும், அப்போது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடம் வரைந்து, ஒரு பார்வை மகஜரும் தயார் செய்தார்கள் என்றும், நான் அந்த பார்வை மகஜரில் கையொப்பம் போட்டேன் என்றும், இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், ஆனால் தற்போது நான் எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

**<u>1, 2 மற்றும் 3ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

இல்லை.

N.
MURALIDHARAN

Digitally signed
by N.
MURALIDHARAN
Date: 2025.06.25
13:19:45 +0530